# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 டிசெம்பர் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** ஆளுநரிடமிருந்து கிடைக்கும் பத்திரங்கள்

**II.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**III.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**IV.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**V.** மனுக்கள்

**VI.** கேள்விகள்

**VII.** வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

**VIII.** அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

**IX.** சபை நடவடிக்கை

கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :

பிரேரணை :

"2016.12.26 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட இணக்கத்தின் படி இன்றைய தினம் (2016.12.29 ஆந் திகதி) நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நடவடிக்கை விடயத்தின் செயற்பாடுகளுக்கு நடவடிக்கை ஒழுங்கு விதி இலக்கங்கள் 15(1), 15(4), 57(1), 57(3), 57(4), 57(5), 88(2) மற்றும் 88(3) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடையும் ஏற்படக் கூடாது எனக் கருதிச் செயற்பட வேண்டும்."

**X.** சபைக் கூட்டம்

கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :

பிரேரணை :

"இன்றைய தினம் கலைந்து சென்ற பின் 2017.01.17 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு இந்த மாகாண சபை கூட வேண்டியதுடன், 2017.01.03 ஆந் திகதி சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாகக் கருதிச் செயற்பட வேண்டும்"

**XI.** பொது நடவடிக்கை

**01.** இசுர தேவப்பிரிய - கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)

பிரேரணை :

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
அபிவிருத்தி (விஷேட ஏற்பாடுகள்) சட்டமூல நகல் பிரதி

பதின் மூன்றாவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் 154 எ(3) உப உறுப்புரையின் கீழ் இந்த மேல் மாகாண மாகாண சபையின் கருத்தினை தெரிவிப்பதற்காக மேன்மை தங்கிய ஜனாதிபதியினால் மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநருக்கு அனுப்பப்பட்டு, கௌரவ ஆளுநரினால் இந்த மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் - அபிவிருத்தி (விஷேட

ஏற்பாடுகள்) சட்டமூல நகல் பிரதி 2016.12.29 ஆந் திகதி (இன்றைய தினம்) இம்மேல் மாகாண சபைக்கு முன்வைக்கப்பட்டதுடன் குறுகிய கால எல்லையினுள் இந் நடவடிக்கையினை நிறைவு செய்யும் தேவை ஏற்பட்டுள்ள படியால் இதற்கு முன் இச் சபையில் வரப்பட்ட இணக்கம் தொடர்பாக கருத்திற் கொண்டு இந்தச் சட்டமூல நகல் பிரதி தொடர்பாக இன்றைய தினம் (2016.12.29ஆந் திகதி)இம் மாகாண சபையில் கலந்துரையாடி எடுக்கப்படும் முடிவிற்கு இணங்க தயாரிக்கப்படும் இம் மாகாண சபையின் கருத்து தொடர்பான தகவலை மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கு அறிவிப்பதற்காக மாகாணத்தின் கௌரவ ஆளுநருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம் மாகாண சபை கருதுகின்றது.

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.12.26 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
**5**ஆம் மாடி, **B**அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.